இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

போர் அல்லது மோதல்கள் நிறைந்த பகுதிகளில், குறிப்பாக மத்திய கிழக்கில் வாழும் கிறிஸ்தவர்கள், அமைதி, நல்லிணக்கம் மற்றும் நம்பிக்கையின் விதைகளாக இருக்க வேண்டும் என இறைவேண்டல் செய்வோம் என்று கூறியுள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

# மோதல் பகுதிகளில் வாழும் கிறிஸ்தவர்களுக்காக செபிப்போம்!


திருத்தந்தை (ANSA)

போர் அல்லது மோதல்கள் நிறைந்த பகுதிகளில், குறிப்பாக மத்திய கிழக்கில் வாழும் கிறிஸ்தவர்கள், அமைதி, நல்லிணக்கம் மற்றும் நம்பிக்கையின் விதைகளாக இருக்க வேண்டும் என இறைவேண்டல் செய்வோம் என்று கூறியுள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

நவம்பர் 26, புதன்கிழமையன்று வெளியிட்டுள்ள டிசம்பர் மாதத்திற்கான தனது இறைவேண்டல் கருத்தில் இவ்வாறு கூறியுள்ள திருத்தந்தை, முழு கருத்தையும் செப வடிவில் வழங்கியுள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை ஒப்புக்கொண்டுள்ள திருத்தந்தை வன்முறையின் மத்தியிலும், அவர்கள் கடவுளின் ஆறுதலான இருப்பையும் சக விசுவாசிகளின் ஆதரவையும் உணர வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

மன்னித்தல், உடைந்த உறவை மீண்டும் கட்டியெழுப்புதல், இரக்கத்துடன் நீதியை கடைபிடித்தல் ஆகியவற்றில் தனிநபர்களுக்கு உதவுவதில் நம்பிக்கை மற்றும் உடன்பிறந்த உறவின் கூட்டுப் பொறுப்புணர்வின் பங்கை வலியுறுத்தியுள்ளார்.


”'அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்' என்று அழைத்த ஆண்டவர் இயேசுவே, நல்லிணக்கம் சாத்தியமற்றதாகத் தோன்றினாலும் எங்களை உமது அமைத்திக்கானக் கருவிகளாக மாற்றுங்கள்” என்று இறைவேண்டல் செய்துள்ள திருத்தந்தை, மிகவும் சவாலான சூழ்நிலைகளில் ஒப்புரவை வளர்ப்பதற்கான கிறிஸ்தவ அழைப்பை எடுத்துக்காட்டியுள்ளார்.

இந்த நோக்கத்தின் மூலம், உலகளாவிய கத்தோலிக்க சமூகம் மோதல்களால் பாதிக்கப்பட்டவர்களுடன் கூட்டுப் பொறுப்புணர்வுடன் உடன் இருக்கவும், கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றி ஒன்றிப்பு மற்றும் நம்பிக்கையை ஆர்வமுடன் உருவாக்குபவர்களாக மாறவும் கேட்டுக்கொண்டு டிசம்பர் மாதத்திற்கான தனது இறைவேண்டல் கருத்தை நிறைவு செய்துள்ளார் திருத்தந்தை.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# நைஜீரியாவின் மேற்குப் பகுதியில் மீண்டும் ஆள்கடத்தல்!

கடத்தல்காரர்கள் எருகுவில் உள்ள கிறிஸ்தவக் கோவில் ஒன்றில் நேரலையாக ஒளிபரப்பப்பட்ட இறைவேண்டலில் கலந்து கொண்ட 38 வழிபாட்டாளர்களைக் கடத்திச் சென்றனர்: பீதேஸ் செய்தி நிறுவனம்


நைஜீரியாவில் பாதிக்கப்பட்ட மக்கள்

நவம்பர் 24, இத்திங்களன்று, ஏறத்தாழ 20 ஆயுதம் ஏந்திய நபர்கள் கொண்ட ஒரு கும்பல் நைஜீரியாவின் மேற்குப் பகுதியான குவாரா மாநிலத்தின் எகிட்டி உள்ளூர் அரசுப் பகுதியிலுள்ள இசாபா சமூகத்தைத் தாக்கியது என்றும், இத்தாக்குதலில், ஒரு கர்ப்பிணிப் பெண், 10 குழந்தைகள் மற்றும் இரண்டு தாய்ப்பாலூட்டும் அன்னையர்களும் கடத்தப்பட்டனர் என்றும் பீதேஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

துப்பாக்கிகளால் பல முறை சுட்டு, ஒரு வயதான பெண்ணுக்குக் காயமேற்படுத்திய இந்தக் கொள்ளையர்கள், அப்போது எருகுவில் உள்ள கிறிஸ்தவக் கோவில் ஒன்றில் நேரலையாக ஒளிபரப்பப்பட்ட இறைவேண்டலில் கலந்து கொண்ட 38 வழிபாட்டாளர்களைக் கடத்திச் சென்றனர் என்றும் அச்செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அந்நாட்டுப் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட முயற்சியினால் கடத்திச் செல்லப்பட்ட இந்த 38 பேரும் விடுவிக்கப்பட்டனர் என்று நவம்பர் 23, ஞாயிற்றுக்கிழமை அன்று தனது அதிகாரப்பூர்வ எக்ஸ்தள பக்கத்தில் கூறியுள்ளார் அதன் அரசுத் தலைவர் Bola Ahmed Tinubu.

ஜான்சி ராணி அருளாந்து - வத்திக்கான்

# அமைதி மற்றும் ஒன்றிப்புக்கான திருத்தந்தையின் திருத்தூதுப் பயணம்!

நவம்பர் 27 முதல் டிசம்பர் 2, வரை திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் மேற்கொள்ளவிருக்கும் துருக்கி மற்றும் லெபனோன் திருத்தூதுப் பயணம், கிறிஸ்தவ உரையாடல், மதங்களுக்கு இடையேயான உறவுகள் மற்றும் தலத்திரு அவை சமூகங்களுக்கான ஆதரவை மையமாகக் கொண்டுள்ளது என்று திருப்பீடச் செய்தித் தொடர்பகம் தெரிவித்துள்ளது.

துருக்கியின் இஸ்னிக் நகரில் இடம்பெற்ற நீசேயா திருச்சங்கத்தின் 1700- வது ஆண்டு நிறைவை நினைவுகூரும் இந்தத் திருத்தூதுப் பயணம், அங்குள்ள சமய மற்றும் அரசியல் தலைவர்களுடனான உறவுகளை வலுப்படுத்தும் என்றும் அச்செய்தித் தொடர்பகம் குறிப்பிட்டுள்ளது.

இந்தத் திருத்தூதுப் பயணத்தின்போது திருத்தந்தை, அங்காரா, இஸ்தான்புல் மற்றும் இஸ்னிக் ஆகிய இடங்களுக்குப் பயணம் மேற்கொள்வார் என்று குறிப்பிட்டுள்ள அச்செய்தித் தொடர்பகம், அந்நாட்டின் அரசுத் தலைவர், முக்கிய அரசு அதிகாரிகள் மற்றும் மதத் தலைவர்களைச் சந்திப்பார் என்றும் தெரிவித்துள்ளது.

மேலும், இஸ்னிக்கில் நடைபெறும் கிறிஸ்தவ ஒன்றிப்புக் கொண்டாட்டத்தில், திருத்தந்தையும், கான்ஸ்டான்டினோப்பிளின் கிறிஸ்தவ ஒன்றிப்பு முதுபெரும் தந்தை, முதலாம் பர்த்தலோமேயு அவர்களும் நீசேயா திருச்சங்கத்தின் இந்த வரலாற்று நிகழ்வை நினைவுகூறுவார்கள் என்றும் தெரிவித்துள்ளது.


பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் நாடான லெபனோனில் உள்ள பெய்ரூட் துறைமுகத்திற்குச் சென்று, அங்குக் கடந்த 2020 - ஆம் ஆண்டு இடம்பெற்ற குண்டு வெடிப்பு தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்காக இறைவேண்டல் செய்வார் என்றும், கிறிஸ்தவச் சமூகம் எதிர்கொள்ளும் சவால்களுக்கு மத்தியில் நம்பிக்கையின் செய்தியாக, ப்கெர்கேயில் லெபனோன் இளையோருடன் கூட்டம் ஒன்று இடம்பெறும் என்றும் அச்செய்திக் குறிப்பு எடுத்துக்காட்டுகிறது.

திருத்தந்தை அவர்களின் இந்தத் திருத்தூதுப் பயணம், துருக்கி மற்றும் லெபனோன் உள்ளிட்ட இரு நாடுகளிலும் உள்ள கிறிஸ்தவச் சமூகங்களை ஆதரிப்பதோடு, அமைதி மற்றும் ஒன்றிப்புக்கான அவரது உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகின்றது.

ஜான்சி ராணி அருளாந்து - வத்திக்கான்


திருத்தந்தை (ANSA)

# 'காசே' (KASIH) நிதியின் ஒதுக்கீடு




பினாங்கு: மலேசிய ஆயர்கள் பகிர்ந்துக்கொண்ட ஓர் எளிய, நம்பிக்கையிலிருந்து பிறந்ததுதான் 'காசே' (KASIH) நிதி. அதாவது, ஏழைகள், நலிவுற்றோர், புலம்பெயர்ந்தோர் மற்றும் காயப்பட்ட பூமியின் அழுகுரலுக்குத் திருஅவை இன்னும் திறம்படவும், சீராகவும், ஒருங்கிணைந்தும் பதிலளிக்க வேண்டும் என்பதே அந்த நம்பிக்கை.

கத்தோலிக்க ஆயர் பேரவையில் ஒரு பொதுவான விருப்பமாகத் தொடங்கியது, இன்று ஒவ்வொரு மறைமாவட்டத்தையும் 'ஒருங்கிணைந்த மனித மேம்பாடு' (Integral Human Development) என்ற பணியின் பின்னால் ஒன்றிணைக்கும் ஒரு தேசிய முயற்சியாக மலர்ந்துள்ளது.

மலேசியாவில் உள்ள ஒட்டுமொத்தத் திருஅவையும் விளிம்பு நிலையில் இருப்பவர்களுடன் துணை நிற்பதற்கான ஒரு வழியாக இது அமைந்தது.

இந்த நிதியின் நிர்வாகியாக இருந்து, பிரச்சாரத்தை ஒழுங்கமைக்கவும், நன்கொடைகளைப் பெறவும், வெளிப்படையான அறிக்கைகளை வழங்கவும் ஆயர் பேரவைக்கு உதவுமாறு 'காரித்தாஸ் மலேசியா' (Caritas Malaysia) கேட்டுக்கொள்ளப்பட்டது.

நிதி சேகரிப்பு வளர்ந்தபோது, ஆயர்கள் ஒரு தெளிவான நிதி ஒதுக்கீடு கட்டமைப்பைச் செம்மைப்படுத்தினர்:

1. ஒரு பகுதி, மனிதாபிமான நிவாரணம் மற்றும் நெருக்கடி காலங்களில் உடனடி உதவிகளுக்காக ஒதுக்கப்பட்டது.
2. மற்றொரு பகுதி, காரித்தாஸ் மலேசியா, படைப்பு நீதிக்குப் பொறுப்பான ஆயர் பணிக்குழு (ECCJ), மற்றும் புலம்பெயர்ந்தோர் மற்றும் நாடோடிகளுக்கான ஆயர் பணிக்குழு (ECMI) ஆகியவற்றின் செயல்பாட்டு மற்றும் பணித் தேவைகளை (mission needs) ஆதரிக்க ஒதுக்கப்பட்டது.

இன்று, 'காசே' (KASIH) நிதியானது திருஅவையின் இதயத்தைத் தொடர்ந்து பிரதிபலிக்கிறது - அதாவது செவிசாய்க்கும், உடன் பயணிக்கும் மற்றும் செயல்படும் ஒரு திருஅவையாக அது திகழ்கிறது. இதன் பயன்பாடு வெளிப்படைத்தன்மை, சமத்துவம் மற்றும் தாக்கம் ஆகிய கொள்கைகளால் வழிநடத்தப்படுகிறது.

மனிதாபிமான உதவிகள், சமூக மேம்பாட்டுப் பணிகள், சுற்றுச்வழல் முயற்சிகள், உருவாக்கப் பயிற்சிகள் மற்றும் அத்தியாவசிய பணி சார்ந்த செயல்பாடுகளுக்கு இந்த நிதி ஆதரவளிக்கும். கவனமான பொறுப்புணர்வுடன் (stewardship), ஒவ்வொரு பங்களிப்பும் இரக்கம், நீதி மற்றும் நம்பிக்கையின் உறுதியான செயல்களாக மாற்றப்படுகின்றன.

இங்கு நாங்கள் முன்வைக்கும் புள்ளிவிவரங்கள், ஒதுக்கீடுகள் மற்றும் படங்கள் ஆகியவை வெறும் நிதி நிர்வாகத்தை மட்டும் குறிக்கவில்லை. மாறாக, மலேசியாவில் உள்ள திருஅவை, தன் மக்களோடு இணைந்து, விளிம்பு நிலையில் இருப்பவர்களுடன் நடக்கத் தேர்ந்தெடுத்துள்ளது என்பதற்கும், தாராள மனப்பான்மையை உண்மையான மனித மேம்பாடாக மாற்றுகிறது என்பதற்கும், 'காசே' (அன்பு) என்பதைச் செயலில் காட்டுகிறது என்பதற்கும் இது ஒரு சாட்சியமாகத் திகழ்கிறது.

# தூய ஆவியாரில் ஒன்றிணைந்து முன்னேறுவோம்





கோலாலம்பூர்: கெப்போங், டேசா ஜெயாவில் உள்ள கிறிஸ்து ஒளி ஆலயம், செலாயாங்கில் உள்ள கிறிஸ்து அரசர் சிற்றாலயம், மற்றும் சுங்கை பூலோவில் உள்ள லூர்து அன்னை சிற்றாலயம் ஆகியவற்றுக்கான ஒருங்கிணைந்த பங்கு மேய்ப்புப்பணி மாநாடு (Parish Pastoral Assembly - PPA) அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வானது பங்குத் தந்தை, பணிக்குழுத் தலைவர்கள், பங்கு மக்கள் மற்றும் கனோசியன் அருள் சகோதரிகள் உள்ளிட்ட பங்குச் மக்களை, செவிசாய்த்தல், உரையாடல், தேர்ந்துத் தெளிதல் என்ற ஆன்மீக உணர்வில் ஒன்றிணைத்தது.

பங்கு மேய்ப்புப்பணிப் பேரவைத் (PPC) தலைவர்களான கிறிஸ்து ஒளி ஆலயத்தைச் சேர்ந்த ஏஞ்சலின் ஜேம்ஸ் மற்றும் கிறிஸ்து அரசர் சிற்றாலயத்தைச் சேர்ந்த மெல்வின் மோசஸ் ஆகியோர், பங்குத்தந்தை அருட்பணியாளர் பீட்டர் அந்தோனி அவர்களுடன் இணைந்து, கடந்த மாநாட்டின் பின்னூட்டங்கள் மற்றும் செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது குறித்த தகவல்களை வழங்கினர். 2023-2025 காலகட்டத்தில், குறிப்பாக இளைஞர்கள், குடும்பம் மற்றும் தலைமைத்துவம் ஆகிய முக்கியத் துறைகளில் எட்டப்பட்ட குறிப்பிடத்தக்க சாதனைகள் இம்மாநாட்டில் மீளாய்வு செய்யப்பட்டன. தியானங்கள், முகாம்கள், அன்பிய இல்லத் திருப்பலிகள், ஆன்மீகப் பயணங்கள் மற்றும் பங்கு தழுவிய உறவுப்பால நடவடிக்கைகள் போன்றவை வெற்றிகரமான முயற்சிகளாக அமைந்தன. இவை ஒவ்வொன்றும் நமது பங்குச் சமூகத்தின் பிணைப்பை வலுப்படுத்தின.

இளைஞர்கள், குடும்பம் மற்றும் தலைமைத்துவம் ஆகிய அதே மூன்று கருப்பொருள்களின் கீழ், 65 பங்கேற்பாளர்களும் குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். இக்குழுக்களில் பணிக்குழு உறுப்பினர்களும் பொதுநிலையினரும் கலந்திருந்தனர். இம்மாநாடு ஆண்டவர் முன்னிலையில் சிறிது நேரம் அமைதி காத்தலுடன் தொடங்கியது. அதைத் தொடர்ந்து தூய ஆவியாரின் வழிநடத்துதலை வேண்டித் தொடக்க ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

பங்கேற்பாளர்கள் பின்வரும் கேள்விகள் குறித்து சிந்தித்தனர்:

* என் பங்கைப் பற்றிய எனது அனுபவம் என்ன?
* எனது பங்குப் பயணத்தைப் பற்றி நான் எப்படி உணர்கிறேன்?
* அன்பியம் (BEC), பங்கு ஒருங்கிணைப்புக் குழு (PCC), பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை (PPC), மற்றும் பங்கு நிதிக் குழு (PFC) போன்ற எமது கட்டமைப்புகள், 'ஒன்றியங்கும் பங்காக' (synodal parish) மாறுவதற்கான எமது அழைப்பிற்கு ஆதரவாக உள்ளனவா அல்லது தடையாக உள்ளனவா?

கேள்வி-பதில் அமர்வின் போது, அருட்பணி பீட்டர் அவர்கள் பல்வேறு கவலைகளுக்குப் பொறுமையுடனும் திறந்த மனதுடனும் பதிலளித்தார். அனைவரும் நேர்மறையான சிந்தனையுடன் இருக்கவும், தூய ஆவியாருக்குச் செவிசாய்க்கவும், விசுவாசக் குடும்பமாகத் தொடர்ந்து பயணிக்கவும் அவர் ஊக்கப்படுத்தினார். மேலும், ஒன்றிப்பு, பங்கேற்பு மற்றும் நற்செய்திப் பணி (communion, participation, and mission) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு 'ஒன்றியங்கும் திருஅவையை' கட்டியெழுப்பவும் அவர் அழைப்பு விடுத்தார்.

இம்மாநாடு நம்பிக்கையூட்டும் மற்றும் உற்சாகமான உணர்வோடு நிறைவடைந்தது. இது தற்போதைய மற்றும் எதிர்காலத் தலைவர்கள், நமது பங்கின் வளர்ச்சிக்காகப் புதுப்பிக்கப்பட்ட ஆர்வத்துடன் பணியாற்றத் தூண்டுகோலாக அமைந்தது.

# நோக்கத்தோடு காத்திருத்தல்: திருவருகைக் காலத்தின் உண்மையான சவால்

திருவருகைக் காலம் முதல் ஞாயிறு (ஆண்டு A)
வாசகங்கள்: எசாயா 2:1–5 உரோமையர் 13:11–14
நற்செய்தி: மத்தேயு 24:37–44

காத்திருத்தல் என்பது எப்படிப்பட்ட உணர்வைத் தரும் என்பது நம் அனைவருக்கும் தெரியும். அது அன்றாட வாழ்வின் சாதாரணமான ஒன்றாக இருக்கலாம் அல்லது வாழ்க்கையையே மாற்றக்கூடிய விஷயமாகவும் இருக்கலாம். காத்திருப்பு நமக்குள் உற்சாகம், பயம், அமைதி அல்லது கவலையை ஏற்படுத்தக்கூடும். அது நாம் நேரத்தை உணரும் விதத்தையே மாற்றுகிறது. உதாரணமாக, ஒரு கால்பந்து போட்டியில் முடிவு தெரியும் தறுவாயில் இருக்கும் கடைசி சில நிமிடங்கள், வெற்றி பெறும் அணிக்கு மிக நீளமாகவும், தோற்கும் அணிக்கு மிகக் குறைவாகவும் தோன்றும்.

இந்த வார நற்செய்தியும் காத்திருப்பதைப் பற்றியதே. ஆனால் உண்மையான கேள்வி என்னவென்றால்: அது உங்களுக்கு என்ன உணர்வைத் தருகிறது? 'மானிட மகனின்' (Son of Man) வருகை உங்களுக்கு மகிழ்ச்சியைத் தருகிறதா அல்லது பயத்தையா? நம்பிக்கையையா அல்லது நடுக்கத்தையா? இயேசுவின் பிறப்புக்காகக் காத்திருக்கும் நாம், "நீங்கள் எதிர்பாராத நேரத்தில்" மீண்டும் வரவிருக்கும் அதே கிறிஸ்து இயேசுவை நினைத்து, நமது உணர்வுகளை நேர்மையாகச் சிந்தித்துப் பார்க்க இந்தத் திருவருகைக் காலம் (Advent) நம்மை அழைக்கிறது.

இயேசுவின் பிறப்பு என்பது ஏதோ ஒரு உணர்ச்சிப்பூர்வமான காட்சி மட்டுமல்ல; அது கடவுள் வரலாற்றில் நுழைந்து, தம் இறையாட்சியை (Kingdom) நிறைவுக்குக் கொண்டுவருவதன் தொடக்கமாகும். பெரியவர்களாகிய நாம் இந்த மறைபொருளை ஆழமாகப் புரிந்துகொள்ள அழைக்கப்படுகிறோம். குழந்தைகள் வானனதர்களையும், இடையர்களையும், விண்மீன்களையும் கண்டு வியப்பது சரியே; ஆனால் நற்செய்தியானது பெரியவர்களை இன்னும் ஆழமாகப் பார்க்க அழைக்கிறது: ஒரு கொடியப் பேரரசு விதித்த கணக்கெடுப்பு, ஏரோது மன்னனுக்குப் பயந்து திருக்குடும்பம் தப்பியோடியது, மற்றும் ஏழைகளுக்கு நற்செய்தியையும் அனைத்து நாடுகளுக்கும் நம்பிக்கையையும் கொண்டுவர இயேசு மேற்கொண்ட பணி.

முதிர்ந்த விசுவாசத்தோடு கிறிஸ்மஸ் வரலாற்றை வாசிக்கும்போது, அது கடவுளின் கனிவையும், அதேவேளையில் அவர் கொண்டுவரும் சவாலையும் வெளிப்படுத்துகிறது. மாட்டுக் குடிலில் இருக்கும் குழந்தை, ஏற்கனவே சிலுவையையும், உயிர்ப்பையும், மானிட மகனின் இறுதி வருகையையும் சுட்டிக்காட்டுகிறது. அவரது பிறப்பு இரண்டு அரசுகளுக்கு இடையிலான மோதலை முன்னறிவிக்கிறது: ஒன்று, அன்பு, இரக்கம், மன்னிப்பு மற்றும் பரிவு ஆகியவற்றின் மீது கட்டப்பட்ட கடவுளின் அரசு; மற்றொன்றுஅதிகாரம், பயம், ஆதிக்கம் ஆகியவற்றின் மீது கட்டப்பட்ட உலக அரசு.

நமது விசுவாசம் அல்லது பற்றுறுதி எங்கே இருக்கிறது என்பதைத் தேர்ந்தெடுக்க திருவருகைக் காலம் நம் ஒவ்வொருவரையும் அழைக்கிறது. நாம் உலக அரசுகளின் கீழ் வாழ்ந்தாலும், நாம் வேறொரு அரசருக்குச் சொந்தமானவர்கள். உலகம் லட்சியம் (ambition) அல்லது சுயநலம் சார்ந்த எளிதான பாதையைக் காட்டினாலும், இயேசுவின் விழுமியங்களான அமைதி, தாராள குணம், திறந்த மனது மற்றும் நம்பிக்கை ஆகியவை நம் வாழ்வை வடிவமைக்க வேண்டும்.

இறுதியில், நாம் நம்பிக்கையோடு காத்திருக்கிறோம். கடவுளின் அரசு வெற்றி பெறும், கிறிஸ்து மீண்டும் வருவார். அதுவரை, ஆழமாகச் சிந்திக்கவும், மீண்டும் கடவுளின் வழியைத் தேர்ந்தெடுக்கவும், குடிலில் இருக்கும் குழந்தையின் மெல்லிய குரலைக் கேட்கவும் இக்காலம் நம்மை அழைக்கிறது:

"நிச்சயமான, நிலையான அன்பை உங்களுக்குக் காட்ட நான் வந்தேன். என்னை நம்புங்கள்."

அருட்பணியாளர் பிரையன் மேகர் OMI

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.